திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைக்கப்பட்டு இருக்கின்ற சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் மொத்தம் தஞ்சை மாவட்டத்தில் எத்தனை உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஏற்கெனவே அமைக்கப்பட்ட சமுதாயக் கிணறுகள் மொத்தம் 178.

திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தொடர்ந்து பழுதுபட்டு செயல்படாது இருப்பதை அரசு சீர் செய்து மீண்டும் இறைவைப் பாசனத்துக்குப் பயன்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பழுதடைந்து தற்போது பயன்படாமல் இருப்பது 115; இதில் பயன்படுத்தவே முடியாதவை 11.

**1—4—1974க்கு முன்னதாக ஓய்வுபெற்றவர்களுக்குப் பணிக்கொடை ஓய்வூதியம் போன்ற வசதிகள்**

*3820—திரு. மெ. ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகரப் பஞ்சாயத்து போன்றவற்றில் இருந்து 1974 ஏப்ரல் முதல் தேதிக்கு முன்னதாக பதவி ஓய்வு பெற்று பணிக்கொடை, ஓய்வூதியம் போன்றவற்றை பெறாமல் இருந்தவர்களுக்கும் அந்த வசதிகளை அளிக்க வேண்டுமென அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம்.

**மல்லிகைப் பூவிலிருந்து தைலங்கள் எடுக்கும் தொழிற்சாலை**

*4432—திரு. பெ. சு. திருவேங்கடம்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில், திருவண்ணாமலை, போளூர், கலசப்பாக்கம் பகுதியில் மல்லிகைப்

1990 ஏப்ரல் 20]

பூவிலிருந்து தைலங்கள் எடுக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம், போளூர், கலசப்பாக்கம், பகுதிகளில் விவசாயிகள் தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கின்ற காலங்களில் மல்லிகைப் பூ ஏராளமாகப் பயிரிடுகிறார்கள். அவைகளுக்கு மார்க்கெட் இல்லாமல் இப்போது பெங்களூருக்குத்தான் அனுப்பப்பட்டு வருகிறது. அதையெல்லாம் அரசு ஆலோசித்து அங்கே மல்லிகைப் பூவிலிருந்து தைலங்கள் எடுக்கின்ற ஒரு தொழிற்சாலையை வேளாண்மைத் துறையினுடைய மார்க்கெட்டிங் பெடரேஷன் மூலமாக ஏற்படுத்துமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

9.50 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, தனியார் யாராவது முன் வருவார்களேயானால் அரசு பரிசீலிக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகளின் நலனை முன்னிட்டு, வேளாண்மைத் துறையே இதைச் செய்யலாம். இலாபகரமாக இருக்க வாய்ப்பு உண்டு. அமைச்சரவர்கள் நம்முடைய அரசின் சார்பிலே ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, தற்போது உத்தேசமில்லை.

### வேளாண்மைக் கல்லூரி

*5280—திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி:

மாண்புமிகு, வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூரில் வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே,

இல்லை.